வணிகக்கல்வி

போக்குவரத்தும் வழங்கல் சேவையும்



e தக்சலாவ கல்விக்கூடம் ™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி - 10.0 :- போக்குவரத்தும் வழங்கல் சேவையும் வணிகங்களின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறிவார்.

தேர்ச்சிமட்டம் - 10.1 :- வணிகங்களின் வெற்றிக்குப் போக்குவரத்தின் பயனுறுதியான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையினைக் கேட்டறிவர்.

போக்குவரத்து

ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி தனிநபர்கள் அல்லது பொருட்கள் கொண்டு செல்லும் செயல்முறையே போக்குவரத்தாகும். வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்குப் போக்குவரத்து மிக அத்தியாவசியமான துணைச்சேவையாகும்.

போக்குவரத்து முக்கியமான ஊடகமொன்று மட்டுமன்றி பல அடிப்படைகளிலும் சமமாக விருத்தி செய்வதன் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட துறையொன்றாகும்.

பின்வரும் போக்குவரத்து தொடர்பான விடயங்களுக்குப் பொருத்தமான போக்குவரத்தின் அடிப்படைகளைக் குறிப்பிடுக.

விடயங்கள்	அடிப்படை அம்சங்கள்
1. ஆறு	
2. காற்று	
3. கப்பல்	
4. கடல்	
5. புகைவண்டி	
6. எரிபொருள்	
7. புகையிரதம்	
8. துறைமுகம்	
9. வானூர்தி	
10. நிலக்கரி	

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

போக்குவரத்தின் அடிப்படை அம்சங்கள்

1. வீதி (Way)

போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் பல்வேறு வழிகளாகும்.
Eg: பெருந்தெரு, புகையிரத மார்க்கம், நீர்வழி, ஆகாயம்.

2. ஊடகம்(Mode)

பல்வேறு மார்க்கங்கள் மூலம் பயணிக்கும் வாகனங்களைக் குறிக்கும்.
Eg: மோட்டார் வண்டி, புகையிரதம், கப்பல், விமானம்.

3. வலு/சக்தி (Power)

ஒவ்வொரு ஊடகத்தையும் செயற்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் எரிபொருள் வகை அல்லது வலுவாகும்.
Eg: நிலக்கரி, கனியஎண்ணெய், மின்சாரம், வாயு.

4. தரிப்பிடம்(Terminal)

போக்குவரத்து ஊடகத்தைப் போக்குவரத்து நடவடிக்கைகளின் போது நிறுத்தி வைக்கப்படும் இடங்களைக் குறிக்கும்.
Eg: பேருந்து தரிப்பிடம், புகையிரத நிலையம், துறைமுகம், விமானநிலையம்.

போக்குவரத்து அடிப்படைகள் மற்றும் உதாரணங்கள்

வீதி (Way)	ஊடகம் (Mode)	வலு / சக்தி (Power)	தரிப்பிடம் (Terminal)
பெருந்தெரு (Highway)	தள்ளுவண்டி, மோட்டார் வண்டி, துவிச்சக்கர வண்டி, லொறி, பேரூந்து வண்டி.	மனித உழைப்பு, கால்நடை உழைப்பு, டீசல், பெற்றோல் வாயு, மின்சாரம்.	பேரூந்து வண்டித் தரிப்பிடம்.
புகையிரத வீதி (Railway)	புகையிரதம்	நிலக்கரி, டீசல், மின்சாரம்.	புகையிரத நிலையம் (Railway Station)
ஆகாய மார்க்கம் (Air Way)	ஆகாய விமானம், உலங்கு வானூர்தி	பெற்றோல்	விமான நிலையம் (Airport)
நீர் வழி (Water ways)	கப்பல், வள்ளம், தெப்பம்.	காற்று, டீசல், மனித உழைப்பு	துறைமுகம் (Harbour).

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

போக்குவரத்து முறையின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள்.

போக்குவரத்து முறைகள்	அனுகூலங்கள்	பிரதிகூலங்கள்
பெருந்தெரு போக்குவரத்து	1. தேவைக் கேற்ற வாறு ஊடகமொன்றைத் தெரிவு-செய்யமுடியும். 2. நாடுபூராகவும் பரம்பிக் காணப்படல் 3. தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பயன்படுத்த முடியும். 4. பயணம் முடியும் வரையிலும் ஒரே போக்குவரத்தைப் பயன்படுத்த முடியும்.	1. கூடிய பொருட்தொகுதியினை ஒரே தடவையில் கொண்டு செல்ல முடியாமை. 2. பெருந்தெருக்களை பராமரிக்கும் செலவு அதிகமாக இருத்தல். 3. தாமதம் மட்டுமன்றி விபத்துக்களும் கூடுதலாகக் காணப்படல். 4. காலநிலைத் தன்மைகளினால் தடைகள் ஏற்படல்.
புகையிரதப் போக்குவரத்து	1. கூடுதலான பொருட்களையும் பிரயாணிகளையும் ஒரே தடவையில் எடுத்துச் செல்ல முடியும். 2. பெருந்தெருப் போக்குவரத்தை விட பாதுகாப்புக் கூடியது. 3. பொருட்களின் தன்மைக்கமைய புகையிரதப் பெட்டிகளைப் பயன்படுத்த முடியும். 4. ஏனைய போக்குவரத்து ஊடகங்களோடு ஒப்பிடுகையில் கட்டணம் குறைவாக இருத்தல். 5. சிற்றுண்டிச்சாலை, உறங்கல் வசதி, பார்வைக்கூடம் போன்ற பல்வேறு வசதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.	1. புகையிரத வீதிகள் நாடு பூராகவும் பரம்பிக் காணப்படாமை. 2. தேவைப்படும் எச்சந்தர்ப்பத்திலும் சேவையினைப் பெற்றுக் கொள்ள முடியாது. 3. பயணம் முடியும் வரையில் இப்போக்குவரத்தை பயன்படுத்த முடியாது. 4. மின்சார சமிக்ஞை தடைப்படல், புகையிரத வீதி பழுதடைதல் காரணமாக காலதாமதம் ஏற்படல்.
நீர்வழிப் போக்குவரத்து	1. சர்வதேச வியாபாரத்திற்கு உதவுதல். 2. கூடுதலான பொருட்களை ஒரேதடவையில் கொண்டு செல்ல முடிதல். 3. பொருள் வகைகளின் தன்மைக்கேற்ப கப்பல்களைத் தெரிவு செய்ய முடிதல்.	1. பரவலாக கப்பல் சேவை காணப்படாமை. 2. கூடுதலான காலம் எடுக்கும்.
ஆகாயவழிப் போக்குவரத்து	1. வேகம் கூடியது. 2. விரைவாக அழிவுறும் பொருட்களுக்குப் பொருத்தமானது. 3. வீதி பராமரிப்புச் செலவு இல்லை.	1. அதிகமாகவோ அல்லது பாரங்கூடிய பொருட்களையோ கொண்டுசெல்ல முடியாது. 2. போக்குவரத்துச் செலவு உயர்வாகக் காணப்படல். 3. விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். 4. தேவைப்படும் நேரங்களில் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாது.

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

குறிப்பு

1. பொருளாதார சமூக விருத்தியிலும் பூகோளமயமாதலிலும் முக்கிய கருவியொன்றாகப் போக்குவரத்து காணப்படுகின்றது.
2. பொருட்களின் உற்பத்தி, நுகர்வு என்பன போக்குவரத்தின் காரணமாகவே வேறுபட்ட இடங்களில் நிகழ்கின்றது.
3. போக்குவரத்து வியாபாரத்தின் பரம்பலுக்கும் தனிநபர்கள் பரவலாக்கப்படுவதற்கும் காரணமாக அமைகின்றது.

போக்குவரத்தின் முக்கியத்துவம்

வணிகருக்கு	தனிநபர்களுக்கு	பொருளாதாரத்திற்கு
1.மூலப்பொருட்களை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்ள. 2.முடிவுப் பொருட்களை உரிய நேரத்திற்கு சந்தைப்படுத்த. 3.ஊழியர்களை குறிப்பிட்ட நேரத்திற்கு அழைத்துக் கொள்ள. 4.வணிகத் தொடர்புகளைப் பேண. 5.சந்தையை விரிவுபடுத்த.	1.சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும். 2.தொழில் வாய்ப்புக்களுக்கு செல்ல. 3.சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ள. 4.பரிசோதனை, ஆய்வு, கல்வி போன்ற நடவடிக்கைகளுக்கு	1.வேலைவாய்ப்பு மட்டத்தை உயர்த்துவதற்கு. 2.சர்வதேச தொடர்புகளை விருத்தி செய்ய. 3.சர்வதேச வியாபார விருத்திக்கு

தொடர்புபடுத்துக

போக்குவரத்து முறைகள்	மட்டுப்பாடுகள்.
1. நீர்ப் போக்குவரத்து	எந்நேரத்திலும் சேவையைப் பெறமுடியாது
2. தெருப் போக்குவரத்து	போக்குவரத்துச் செலவு மிக அதிகம்.
3. புகையிரத போக்குவரத்து	கூடுதலான காலம் எடுத்துதல்
4. ஆகாய போக்குவரத்து	பயணத் தாமதங்களும் விபத்துக்களும் அதிகம்

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk